# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.</u>

# <u>OS 241/2021</u>

**2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.சுரேஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் • | : | முகமது அமீர் பாட்ஷா | தொழில் | : | |
| தந்தை பெயர் • | : | அகமது மொய்தீன் | கிராமம் • | : | |
| வயது • | : | 36 | வட்டம் • | : | காஞ்சிபுரம் |
| நேரம் • | : | 12.25 முதல் 1.10 | • | : | |

**வா.சா. 1 குறுக்கு விசாரணை**

எனக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது. இந்த வழக்கு சொத்தும் காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து வேறு வேறு ஆகும். வா.சா.ஆ 12ல் தாவா மூன்றாவது ஐட்டம் சொத்தும் இந்த வழக்கு சொத்தும் வேறு வேறு ஆனவை. சார்பு நீதிமன்றத்தில் நடைபெறும் அசல் வழக்கு எண் 256/2021ல் கண்டுள்ள மூன்றாம் ஐட்டம் சொத்தில் விஸ்தீரணம் 64 சதுரடிக்கு ஐக்குபந்தி என்னவென்றால். ஐக்குபந்தி எனக்குத் தெரியவில்லை. இந்த வழக்கில் தாவா இரண்டாம் ஐட்டம் சொத்தாக 64 சதுரடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாவா இரண்டாம் ஐட்டம் சொத்தை என் தந்தை எனக்கு வாய்மொழியாக ஒப்படைத்தார் என்று தெரிவித்து இருக்கிறேன் என்றால் சரிதான். எனது மூல விசாரணையில் என் தந்தை வாய்மொழி தானமாக அந்த சொத்தை கொடுத்துள்ளதாக தெரிவித்து இருக்கிறேன் என்றால் சரிதான். எந்த தேதி வருடம், என் தந்தை அவ்வாறு தாவா சொத்தை எனக்கு கொடுத்தார் என்று எனக்குத் தெரியாது. சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் என் தந்தை வாய்மொழிதானமாக தாவா இடத்தை கொடுத்ததாக நான் தெரிவிக்கவில்லை என்றால் அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் கிடையாது. தாவா சொத்து ஆதியில் எனது கொள்ளுப்பாட்டிக்கு சொந்தம் என்றால் சரிதான். நாங்கள் சுமார் 5 தலைமுறையாக முகமதியர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை வாய்மொழி தானாமாக

நான் பெற்றுள்ள பட்சத்தில் வருவாய் ஆவணங்கள் என் பெயரில் மாற்றிக்கொள்ளாததற்கு என்ன காரணம் என்றால் எனக்கு போதுமான வருமானம் இல்லை. வாய்மொழிதானம் நடந்து சுமார் 12 வருடம் முதல் 13 வருடங்கள் என் தந்தை உயிருடன் இருந்தார். வாய்மொழிதானம் கொடுத்தபின்பு என் பெயரில் வருவாய் ஆவணங்களை மாற்றிக்கொள்வதற்காக என் தந்தை ஏதேனும் கடிதம் கொடுத்தாரா என்றால் இல்லை. வாய்மொழிதானம் கொடுக்கப்பட்ட போது எனக்கு வயது 18க்கு மேல் இருக்கும். எனக்கு என் தந்தை வாய்மொழிதானமாக கொடுத்ததாக கூறும் காலத்தில் தாவா சொத்துகள் காலியிடமாக இருந்ததால் அல்லது அதில் கட்டிடம் கட்டப்பட்டு இருந்ததா என்றால் சுற்றச்சுவர் போடப்பட்டு இருந்தது, தண்ணீர் தொட்டி போடப்பட்டு இருந்தது. மேற்கூரை போடப்பட்டு இருந்தது. என் தந்தையால் வாய்மொழி தானமாக கொடுக்கப்பட்ட கூறப்படும் காலத்தில் என்னுடைய ஒரு நாள் வருமானம் 200 ரூபாய் ஆகும். வாய்மொழி தானம் கொடுக்கப்பட்ட காலத்தில் எனது தாத்தா உயிருடன் இல்லை. அந்த இடத்தில் மின்சார வசதி உள்ளது. மின்இணைப்பு எனது தாத்தா பெயரில் உள்ளது. அந்த மின் இணைப்பு பெற்றது என் தந்தையாகும். நான் எனது தாத்தா பெயரில் மின் இணைப்பு வாங்கியதாக நான் தெரிவித்து இருக்கிறேன் என்றால் என் அப்பா அனுபவித்து வந்ததால் நான் பணம் கொடுத்து என் தந்தை என் தாத்தா பெயரில் மின்இணைப்பு வாங்கினார். 2013ம் வருடம் எனது ஆண்டு வருமானம் எவ்வளவு என்று சரியாக தெரியவில்லை. 2013ம் வருடம் நான் வருமான வரி எதுவும் கட்டவில்லை. 2013ம் வருடம் நான் தொழில் செய்து வருவதற்கு ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். வா.சா.ஆ 11 ஆனது 2019ம் ஆண்டிற்கு உட்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 10 யாருக்கு கொடுக்கப்பட்டது என்ற விவிரம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 9 ஆவணத்தில் என்னுடைய முகவரி இல்லை என்றால் சரிதான். 2013ம் வருடம் நான் தொழில் செய்து வந்ததை காட்டுதவற்கான ஆவணம் எதுவும் இல்லை. தாவாவில் என்னுடைய வாதுரையில் நான்தான் கடையை கட்டியதாக தெரிவித்துஇருக்கிறேன் என்றால் சரிதான். நான் கடையை கட்டும் போது கட்டடம் கட்டுதவதற்கான அனுமதி பெற்று கட்டினேனா என்றால் இல்லை.என் தந்தையாவது காஞ்சிபுரம் நகராட்சியடம் நகட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்றாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனக்கு 2010 ஆண்டு திருமணம் நடைபெற்றது. 2010ம் ஆண்டிற்கு பின்புதான் பிரதிவாதி பள்ளி மற்றும்

கல்லுரி படிப்பை முடித்தார் என்றால் சரிதான். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளது. பிரதிவாதி படித்ததற்கு செலவு செய்ததற்கு என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. என் தந்தையிடம் இருக்கலாம். வா.சாஆ 17 எனது சகோதரர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சாஆ 17 ல் கண்டுள்ள பணத்தை நானும் சேர்ந்து கொடுத்தேன். அந்த லோன் என் தந்தை பெற்றதாகும். மொத்த கடன் தொகை 2,15,000 ஆகும். எப்போது அந்த கடன் பைசல் செய்யப்பட்டது என்றால் 2020ம் ஆண்டு இருக்கும். எத்தனை மாத தவணையில் அந்த பணம் கட்டப்பட்டது என்றால் தெரியாது. கடன் தொகை முழுமையாக செலுத்தப்பட்டப்பின்பு அதற்கான சான்றிதழ் என் தந்தை உயிருடன் இருந்த போது பெறப்பட்டது. தாவா சொத்தின் விஸ்தீருணமும் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விஸ்தீரணமும் வேறு வேறு ஆகும். இந்த சொத்து குறித்து எங்களுக்குள் எந்த பாகப்பிரிவினையும் நடக்கவில்லை. பிரதிவாதிக்கு என் தந்தை செட்டில்மெண்ட் கொடுத்தது செல்லாது என்று தெரிவித்து இருக்கிறேன் என்றால் சரிதான். எதற்காக அவ்வாறு தெரிவித்து இருக்கிறேன் என்றால் அது மூதாதையர் சொத்தாகும். வாய்மொழிதானமாக கொடுக்கப்பட்டதாக கூறுப்படும் சொத்து மூதாதையர் சொத்தாகும். வாய்மொழிதானம் கொடுப்பதற்கு முன்பு என் தந்தை சட்டக்கருத்துரை எதையும் பெறவில்லை. எந்த தந்தை வாய்மொழி தானம் கொடுத்ததாக கூறப்படும் காலத்தில் பிரதிவாதியை தவிர அனைவரும் இருந்தார்கள். மற்ற சகோதரர்கள் வாய்மொழி தானமாக எழுதிக்கொடுத்தது குறித்து எந்த சம்மதம் கடிதமும் எழுதிக்கொடுக்கில்லை. நூர்மா என்பவர் என்னுடைய இளைய தாயார். எழுதிக்கொடுத்த ஆவணத்திலும் என் தந்தை எழுதிக்கொடுத்த வாய்மொழிதானம் குறித்தான தேதி மாதம் வருடம் குறிப்பிடப்படவில்லை என்றால் ஞாபகம் மறதி காரணமாக அவ்வாறு குறிப்பிடாமல் இருந்திருக்கலாம்.

**பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்கு குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**ஒ/ப ஆர்.இராஜேஸ்வரி**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**காஞ்சிபுரம்**